**பல்கலைக்கழக சேமலாப நிதியம் - 2020**

---

## 1.1 அபிப்பிராயம்

பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுளுக்கு அமைவாக எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றவாறு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவு பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அந்த ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிலையமானது கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அந்த ஆளுகைக்குட்பட்டதரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் துணைப் பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்

கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வின் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------

முழுமையாக எடுத்துக் கொள்ளும் பட்சத்தில் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக் கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவே அன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக் கூற்றுக்களிலுள்ள

வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானவாறும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக கவனம் செலுத்தும் போது நிலையத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடியவாறு அதன் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதும், அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- யாதேனுமொரு எழுத்து மூலமான சட்டம் அல்லது நிலையத்தின் பணிப்பாளர் சபையினால் வெளியிடப்பட்ட விசேட கட்டளை தொடர்பாக இணங்கியிருந்ததா என்பதும்,
- தமது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும்,
- வளங்கள் கால வரையறைகளின் உள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கு இணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

## 1.5 பெர வேணயடிய மற்றும் செலுத்த வேணடிய கணக்குகள்

### 1.5.1 செலுத்த வேணடிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2001 ஆண்டிலிருந்து 2020 ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா. 48,891,896 பெறுமதியான விநியோகித்தும் ஆனால் உரிமைக் கோரப்படாத காரணமாக இரத்தான 473 காசோலைகள் மீளாய்வாணடிலே டிசம்பர் 31ஆம் திகதியில் நிதிநிலைமை கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிரிந்த | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் உரிமைக் கோரப்படாத இரத்தான காசோலைகளுக்கான காரணம், முறையாக அங்கத்தவரினால் வங்கிக்கணக்கு விபரங்கள் சமர்ப்பிக்கப்படாமைக்கும். இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் சேமலாப நிதிய மேற்பார்வை குழுவின் பரிந்துரையின் பிரகாரம் | உரிமைக் கோரப்படாத மீதிகள் தொடர்ப்பாக உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தி தீர்வு காணபதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | |
|---|---|
| போதிலும் அந்த நிதியத்தை செலுத்தி விடுதலைப் பெற்றுக்கொள்வதற்கு முகாமைத்துவம் போதுமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வில்லை. | பல்கலைக்கழக மானியங்கள ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் உரிய பெயர்ப் பட்டியல் பகிரங்கப் படுத்தப்பட்டுள்ளது. |

## 1.6 சட்டங்கள், ஒழுங்குவிதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், ஒழுங்குவிதிகள், பிரமாணங்கள் என்பன | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1978 இன் 16ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 93 (2) பிரிவு | மோரட்டுவை பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய விரிவுரையாளர் ஒருவரின் சேவை 2000 செப்தெம்பர் 10ஆம் திகதியில் நிறுத்தியுள்ள போதிலும் நிதியத்தின் மீதியை விடுவிப்பதற்கு 2020 மே 29ஆம் திகதி வரை 227 மாத அளவான காலம் தாமதமாகிருந்தது. சேவையை நிறைவு செய்த தினத்தில் கணக்கில் காணப்பட்ட ரூபா. 227,072 மீதிக்கு ரூபா.1,228,899 வட்டியையும் சேர்த்து ரூபா.1,455,971 விடுவிக்கப்பட்டிருந்தது. | 1982.02.05 ஆம் திகதிய ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 155 இன் பிரகாரம், சேவையில் இருந்து விலகி 02 மாத காலப் பகுதியினுள் ஊழியர் சேமலாப நிதியத்தின் விடுவித்தல் பத்திரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குவிற்கு அனுப்ப வேண்டியுள்ள போதிலும் விரிவுரையாளரின் சேமலாப நிதியினை விடுவிக்கும் பத்திரம் பணி இடைநிறுத்தப்பட்டு 227 மாதங்களின் பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த தினத்தில் இருந்து சேமலாப நிதியத்தில் இருந்து விடுவிக்கும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், குறித்த அங்கத்தவருக்கு அவரது கணக்கின மீதியினை அடிப்படையாகக் கொண்டு வட்டி கணிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் | பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஓய்வு பெருவதற்கு முன்னர் ஒரு சில காரணங்களுக்காக சேவையை நிறுத்திக்கொள்ளும் போது நிதியத்தில் ஊழியரின் பெயரில் காணப்படுகின்ற மீதியை மற்றும் வட்டியை தாமதமின்றி ஊழியருக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிதியத்திற்கு நட்டமொன்று ஏற்படவில்லையென்பதுடன் ஊழியரின் செலவு மீதியின் அடிப்படையில் பொருத்தமான வட்டி சரியாக செலுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 1978 இன் 16ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 95 ஆம் பிரிவு | (i) பங்களிப்பாளரின் கணக்கினை முடிவுறுத்தி 03 மாத காலப் பகுதியினுள் பங்களிப்பாளரின் கணக்கில் உள்ள மீதியை செலுத்தி முடிக்க வேண்டியுள்ளது. அவ்வாறாயினும் சேவையினை முடிவுறுத்திய பங்களிப்புச் செலுத்துவோர் 108 பேரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் குறித்த உயர் கல்வி நிறுவனத்திற்கு ஆற்றுப்படுத்தி கொடுப்பனவு செய்வதற்காக 01 மாதம் முதல் 317 மாதம் வரையிலான காலப் பகுதி தாமதம் ஏற்பட்டுள்ளதுடன் அந்த தாமத காலத்திற்கான கூட்டுத் தொகை ரூபா.9,241,071 பெறுமதியான வட்டி செலுத்தப்பட்டிருந்தது. | ஒவ்வொரு ஆண்டிலும் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு அடுத்த வருடத்திற்கான வட்டி விகிதம் தீர்மானிக்கப்படும் வரை திசெம்பர் முதல் பெப்ரவரி மாதம் வரையில் கொடுப்பனவுகள் நிறுத்தப்படுவதுடன் 2-3 மாத காலங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் சேமலாப நிதியை விடுவிக்கும் பத்திரத்தை நிறுத்திவைக்க வேண்டியுள்ளது. அதன் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் எதுவித தாமதமும் ஏற்படவில்லை என்பது தெளிவாகின்றது. அத்துடன், வட்டி செலுத்துதள் உறுப்பினரகளின் செலவில் உள்ள தொகையின் அடிப்படையில் இடம்பெற்றுள்ளதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு உரித்தல்லாத எவ்வித தாமத வட்டியும் செலுத்தப்படவில்லை. இக் கொடுப்பனவுகள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 95 ஆம் பிரிவின் இணக்கத்திற்கு உட்பட்டதாகும். | அதிகாரச் சட்டத்தின் 95 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பங்களிப்பாளர் சேவையை முடிவுறுத்தி 03 மாத காலத்தினுள் மீதியினை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | (ii) சேவை முடிவுறுத்தப்பட்ட சேவை பங்களிப்பாளர் வேணடுமென்று அல்லது கவனக்குறைவினால் நிதியத்தை விடுவத்துக்கொள்வதற்காக விண்ணப்பித்தல் 01 மாதம் முதல் 312 மாதங்கள் வரையான காலப்பகுதி தாமதமடைந்திருந்ததுடன் தாமதமாக விண்ணப்பிக்கும் நிலையை தவிர்ப்பதற்காக ஆணைக்குழுவினால் போதுமான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொணடிருக்கவில்லை. | 1982 பெப்ரவரி 02ஆம் திகதிய 155 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்தின் ஊடாக இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இப்போது சேமலாப நிதிய விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் நடவடிக்கைகளை மேலும் முறையாக்கப்பட்டு புதிய சுற்றுநிருப வரைபொன்றை தயாரித்திருப்பதுடன் அதை எதிர்காலத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சேவை முடிவுறுத்தப்பட்ட சேவை பங்களிப்பாளர்கள் வேணடுமென்று அல்லது கவனக்குறைவினால் நிதியத்தை விடுவத்துக்கொள்வதற்கு விண்ணப்பித்தலை குறைத்துக்கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 1982 பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதிய இலக்கம் 155 உடைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | (i) உயர் கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்ர விண்ணப்பப் படிவத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு 02 மாதங்களுககுள் அனுப்பப்படுதல் உரிய உயர் கல்வி நிறுவனத்தின் ஏதாவது தவறொன்று அல்லது தாமதத்தினால் செலுத்தப்படுகின்ற வட்டி உரிய பொறுப்பு கூறவேண்டிய அலுவலருக்கு பொறுப்புக்கட்டணமாக்கப்பட வேண்டும். ஆவ்வாறு இருந்த போதிலும் ஆனைக்குழுவின் செயலாளருக்கு | இது விடயமாக பல்கலைக்கழக சேமலாப நிதி மேற்பார்வை குழுவினால் நீண்ட கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் பல்கலைக்கழக துணை வேந்தர்களின் அபிப்பிராயம் யாதெனில் தாமதத்திற்கான காரனம் அலுவலர்கள் மாத்திரமன்றி தகவல்களை வழங்குவதற்கும் மற்றும் திரட்டுவதற்கும் எடுக்கும் காலத்தின் மீது தங்கியுள்ளது என்பதாகும். இதன் பிரகாரம் இப்போது அது தொடர்பாக புதிய வழிகாட்டல்கள் உள்ளடக்கிய சுற்றுநிருப வரைபொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதை எதிர்காலத்தில் வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிதியத்தினை விடுவிக்கும் போது ஏதாவது தாமதமொன்று இடம்பெற்றிருன்தால் அந்த தாமதத்திற்கான காரணத்தை சரியாக அடயாளங் கண்டு அதற்கு பொறுப்பு கூறவேண்டிய அலுவலருக்கு பொறுப்புக் கட்டணமொன்ரை விதித்தல் முறைமையாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அனுப்பப்படும் போது 01 மாதம் முதல் 34 மாதங்கள் வரையிலான காலப் பகுதி தாமதமானதன் பொருட்டு வட்டி கணிக்கப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் போது சுற்றுநிருப ஏற்பாட்டின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக் க வில்லை. | | |
| (ii) | பங்களிப்புத் தொகையை விடுவிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு உயர் கல்வி நிறுவனங்களினால் அனுப்பி வைக்கப்படுகின்ற விண்ணப்பங்களை கவனத்திற் கொண்டு ஒரு மாதத்திற்குள் பங்களிப்பாளருக்கு நிதியத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்காக 01 மாதத்திலிருந்து 53 மாதங்கள் வரையான கால தாமதமொன்று இடம்பெற்றிருப்பதாக அவதானிக்கப்பட்டது. | அந்த விண்ணப்பங்கள் முறையாக நிரப்பப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு உண்மையாக கிடைத்த தினங்கள் இதன்போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். அதற்கு மேலதிகமாக ஒவ்வொரு வருடமும் திசெம்பரில் இருந்து பெப்ரவரி வரையான காலப்பகுதியிள் கிடைக்கப்பெறுகின்ற சேமலாப நிதி விண்ணப்பங்களுக்கு இறுதி கணக்குகள் தயாரிக்கப்பட்டு வருடாந்த வட்டி கணிப்பிடப்படும் வரை திசெம்பர் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களிலே சேமலாப நிதி விநியோகிக்கப்பட மாட்டாது. அவ்வாறே 2020 வருடத்தில் கொவிட் 19 பரவலை காரணமாகக் கொண்டு 2020.03.13 இல் இருந்து 2020.05.13 வரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மை இதற்கு காரணமாகும். | உயர் கல்வி நிறுவனங்களினால் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற விண்ணப்பங்களை கவனத்தில் கொண்டு பங்களிப்புத்தொகைய விடுவிக்கும் போது ஏற்படக்கூடிய தாமதங்களை குறைத்துக்கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

-------------------

### 2.1 நிதி பெறுபேறு

-------------------------------

மீளாய்வாண்டின் தொழிற்பாட்டு பெறுபேறு ரூபா.4,063,226,896 மிகை ஒன்றினைக் கொண்டிருந்ததுடன், அதற்கேற்ப முன்னைய ஆண்டின் மிகையானது ரூ.3,770,201,568 ஆகும். அதன் பிரகாரம் நிதி பெறுபேறுகளில் ரூபா.293,025,328 பெறுமதியான விருத்தி ஒன்றினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்த விருத்திக்கு முதலீட்டு வருமானம் அதிகரித்தல் பிரதான காரணமாக அமைந்திருந்தது.